5. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)–ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் 4–வது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கின்றேன்:

1. திரு. பி.எம். நரசிம்மன்
2. திரு. எஸ்.பி. சண்முகநாதன்
3. திரு. சு. ரவி
4. திரு. இரா. குமரகுரு
5. திரு. சு. குணசேகரன்
6. திரு. வி.வி. இராஜன் செல்லப்பா

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிதல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “2018 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 8 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு @ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்”

என்னும் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்மானத்தை வழிமொழிதல். மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

@ 349 முதல் 384 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.